# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.
# O.S.No.13/2021
# வழக்கு சாட்சி PW.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **மல்லிகா** | தொழில் | : இல்லத்தரசி |
| தகப்பனார் பெயர் | : –––– | கணவர் பெயர் | : சந்திரசேகரன் |
| கிராமம் | : மதுரை | இனம் | : பெண் |
| தாலுகா | : மதுரை | வயது | : 65/2025 |
| மாவட்டம் | : மதுரை | நாள் | : 18.09.2025 |

**<u>முதல் விசாரணை :</u>**

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன் . நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. 17.12.1994 தேதியிட்ட வெட்டுக்கூழி கிரையப்பத்திரம் அசல் **வா.சா.ஆ.1** ஆகும்.
2. 1995 மற்றும் 1996 வருடத்திற்குரிய கிஸ்தி ரசீதுகள் அசல் (எண்ணம் 2 ) **வா.சா.ஆ.2** ஆகும்.
3. 13.07.2013 தேதியிட்ட எனது பெயருக்கு வழங்கப்பட்ட பி மெமோ நோட்டீஸ் அசல் **வா.சா.ஆ.3** ஆகும்.
4. 1999–2015 வருடத்திற்குரிய கிஸ்தி ரசீதுகள் அசல் ( 12 எண்ணம் ) **வா.சா.ஆ.4** ஆகும்.
5. எனது பெயரில் செலுத்தப்பட்ட சொத்து வரி ரசீதுகள் அசல் ( 2 எண்ணம்) **வா.சா.ஆ.5** ஆகும்.

6. அசல் வழக்கு எண்.16/2017 என்ற வழக்கில் இடைக்கால மனு எண். I.A.No.392/2018–ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆகும்.

7. 19.09.2017 தேதியிட்ட எனது கணவர் சந்திரசேகர் கொடுத்த புகாரின் பேரில் வழங்கப்பட்ட மனு ரசீதின் நகல் **வா.சா.ஆ.7** ஆகும்.

8. அசல் வழக்கு எண்.16/2017 என்ற வழக்கின் வாதுரையின் நகல் **வா.சா.ஆ.8** ஆகும்.

**(ஆவணங்கள் குறியீடு செய்யவேண்டி வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open court and read over to the witness and acknowledged by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2025.09.18 04:45:52 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.